# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 144/2025 நாள்.18.04.2026

DW1- திருமதி பாத்திமாஜான் க/பெ. திரு.ஜப்பார்

3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

3ஆம் பிரதிவாதி முகமதுஅலி இடத்தை விலை பேசியிருந்தேன் என்றால் விற்றுகொடுக்கசொன்னேன். அவர் எனக்கு உறவினரா என்றால் ஆமாம். அவருக்கு நான் அதிகார ஆவணம் கொடுத்தேன் என்றால் ஆமாம். இன்றைய வரை அந்த அதிகார பத்திரம்அமலில் உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய அதிகார முகவர் என்ற நிலையில் வாதியுடன் ஒப்பந்தம் போட்டார் என்றால் ஆமாம். 5லட்சம் முன்பணம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம் அப்படிதான் என்னிடம் சொன்னார். சொத்திற்கு தனிபட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் பெயரால் தனிபட்டா ஏற்படவில்லை என்றால் தெரியவில்லை. பட்டா இல்லாததுதான் ஒரே பிரச்சனையா என்றால் சரியல்ல நான் கோஷா பெண்மணி என்பதால் எங்கும் போக முடியாததால் அவரை விற்றுகொடுக்க சொன்னேன். இன்றைய வரை வாதி கொடுத்த முன்பணம் 5லட்சத்தை அவரிடம் திரும்பி கொடுக்கவில்லை என்றால் ஆமாம். சொத்தில் என்ன வில்லங்கம் என்றால் தெரியவில்லை. மனை எண் 202 எந்த புல எண்ணில் வருகிறது என்று வாதி வழக்குரையில் சொன்னதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மனை எண் 202க்கும் என்னுடைய ஆவணத்தில் காட்டபட்ட புல எண் 28/1பி கட்டுபட்டு வரவில்லை என்றும் அதனால் வாதி பத்திரம் பெற்று கொள்ள முடியவில்லை என்றும் முன்பணம் வாங்கிய 5லட்சத்தை நாங்கள் வட்டியுடன் சேர்த்து கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா மனை எண் 202 புல எண் 20/1 எ யில் கட்டுபட்டு வந்து அதில் பல நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றும் அதனால் அந்த மனை எண்ணை அமைப்பில் அடையாளம் காணமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் 3ஆம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க இயலவில்லை என்றால் சரியல்ல. தவறான தகவலை சொல்லி ஒப்பந்தம் செய்ததால் வாதி கோரிய பரிகாரம்

அவருக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. நான் முதல்வர் என்பதால் அதற்கு பொறுப்பு என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.18 16:50:01 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**